# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 301/பேரூ/2023
நாள். 16.11.2023

திரு. S.T. லோகநாதன்,
அத்தாணி,
ஈரோடு மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
அத்தாணி பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம். .... எதிர்மனுதாரர்

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அத்தாணி வழி, செம்புளிச்சாம்பாளையம் அஞ்சல், வடக்குதோட்டம், எண்.129 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S.T. லோகநாதன் என்பவரது 22.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2023 அன்று பெறப்பட்டு, 301/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அத்தாணி வழி, செம்புளிச்சாம்பாளையம் அஞ்சல், வடக்குதோட்டம், எண்.129 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S.T. லோகநாதன் என்பவர் தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அத்தாணி கிராமம், செம்புளிச்சாம்பாளையத்தில் ஸ்ரீ அம்மன் பைபர்ஸ் என்ற தேங்காய் மட்டை நாரை பிரித்தெடுக்கும் நிறுவனம் இயங்கி வருகிறது. மேற்படி நிறுவனமானது அத்தாணி கிராமம் ரீ.ச. எண்கள் 84, 85 மற்றும் 199/2.3 ஆகிய பூமிகளில் தேங்காய் மட்டை நார்களின் கழிவுகள் மற்றும் பித்துகளை பெருமளவில் கொட்டி வைத்து நீரில் சுத்தப்படுத்தி அந்நீரை எவ்வித சுத்தகரிப்பும் செய்யாமல் அப்படியே ஓடைகளில் விடுவதால் அருகில் உள்ள பொதுமக்களின் குடிநீர் ஆதாரமான கிணறு மற்றும்

ஆழ்துளை குழாய் கிணறு ஆகியவைகளின் நீர் மாசடைந்து வருகிறது. இது சம்பந்தமாக ஊர் பொது மக்கள் ஆகிய நாங்கள் கடந்த 18.11.2022–ம் தேதியிட்ட மனுவை மாவட்ட ஆட்சியர் ஈரோடு அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும் கொடுத்தோம். அதன் பேரில் குறிப்பாணையை உயர்திரு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு அவர்கள் அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலருக்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி அனுப்பினார்கள். மேலும் மேற்படி நிறுவனத்தினால் ஏற்படும் மாசு கட்டுப்பாடு வாரிய அறிக்கை மற்றும் சம்பந்தப்பட்ட 29 ஆவணங்களை இணைத்து மனுவை செயல் அலுவலர், அத்தாணி பேரூராட்சி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் மாசுகட்டுப்பாடு வாரிய கடிதத்தின் பேரில் நடவடிக்கை எடுக்க செயல் அலுவலர் அத்தாணி பேரூராட்சி அவர்களுக்கு தகுந்த அதிகாரம் இருப்பதாக குறிப்பிட்டு தக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்ட நிலையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வேண்டுமென்றே பெருந்துறை மாசுகட்டுப்பாடு வாரியத்திற்கு மீண்டும் கடிதத்தை அனுப்பி மாசு ஏற்படுமா என்று அறிக்கை தர கோரினார். இச்செயல் தக்க நடவடிக்கை எடுக்காமல் மீண்டும் என்னையும் பொதுமக்களையும் அலைக்கழிப்பு செய்து, மேற்படி நார் மில் உரிமையாளருக்கு ஆதரவாக தக்க ஆதாயம் பெற்றுக்கொண்டு செயல்பட்டுவருகிறார். மேலும் எங்களது மனு மற்றும் குறிப்பாணையின் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும், மேற்படி நார் மில்லின் கட்டடங்களையும், இயந்திரங்களையும் முறையாக அனுமதி பெற்றுள்ளதா என்பதை ஆய்வு செய்யாமலும், பொதுமக்களுக்கு காற்று மற்றும் குடிநீரினால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டை ஆய்வு செய்யாமலும், மேற்படி நார் மில் உரிமையாளருக்கு தக்க பாதுகாப்பு அளித்து வருகிறார்.

மேலும் செயல் அலுவலர், அவர் பணிபுரியும் பேரூராட்சி பகுதியில் தங்காமல் சேலம் மாவட்டத்திலிருந்து தினம்தோறும் பவானி லட்சுமி நகர் வரை பஸ்ஸில் வந்து பின்பு பேரூராட்சி அலுவலக ஊழியர் ஒருவர் லட்சுமி நகர் சென்று பைக்கில் அழைத்து வருவதும் மாலை 3.00 மணி அளவில் மீண்டும் அலுவலக ஊழியர் பவானி லட்சுமி நகர் கொண்டு போய் விடுவதும் வாடிக்கையாக உள்ளது. இதனால் செயல் அலுவலரின் பணிநேரம் குறைந்து விடுவது மட்டுமல்லாமல் மற்ற ஊழியரின் பணி நேரம் குறைந்து பொதுமக்கள் அலுவலக நேரத்தில் செயல் அலுவலரை பார்ப்பதும் மிகவும் குறைந்து போவதால் மக்கள் பிரச்சினைகளையும் கண்டுகொள்வதில்லை.

மேலும் அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலர், மேற்படி நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்காததால் பொது மக்கள் சார்பாக முறையாக ஈரோடு, மாவட்ட ஆட்சியர் மற்றும் ஈரோடு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்களிடம் தக்க நடவடிக்கை எடுக்கும்வரை அத்தாணி பேரூராட்சி அலுவலகத்தில் கடந்த 31.07.2023–ம் தேதி தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்த முடிவு செய்து அனுமதி பெற மனு கொடுக்கப்பட்டது. இதனால் கோபமடைந்த செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலக ஊழியரை வைத்து காவல் நிலையத்திற்கு பொதுமக்களின் முக்கிய நபர்களை வரும்படி அவர்களின் வீட்டுக்கு சென்று அழைத்தனர். செயல் அலுவலர் பேரூராட்சி அலுவலகத்தில் வைத்து எவ்வித சமரசமும் பேசாமல் காவல் நிலையத்தில் வைத்து பேசிக் கொள்ளலாம் என கூறி முக்கிய நபர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்வதற்காக இவ்வாறான செயலில் ஈடுபட்டு தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார். இச்செயலை அறிந்த அந்தியூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோர் நேரில் அத்தாணி பேரூராட்சி அலுவலகம் வந்து சமரசம் பேசி தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததன் பேரில் மேற்படி போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது. மேலும் மேற்படி நிறுவனம் கொட்டி வைத்த நார் கழிவுகளை அகற்ற இன்றுவரை எவ்வித நடவடிக்கையும்

எடுக்காமல் நிறுவன உரிமையாளருக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறார் என்பதை மேற்கண்ட செயல்பாடுகள் மூலம் உறுதிபடுத்தப்படுகிறது.

ஆகவே தாங்கள் ஈரோடு மாவட்டம், அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.மு. நாகேஷ் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து அவர் செய்த குற்றத்திற்காக அவர் மீது தக்க தண்டனை வழங்குமாறு தங்களை தாழ்மையுடன் வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

(3) ஆனால் அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலர், மனுதாரர் சமர்ப்பித்த புகார் மனு மீதான விளக்க அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

(4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலரும் 19.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.10.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(5) 19.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு. S.T. லோகநாதன் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

ஈரோடு மாவட்டம், அந்தியூர், அத்தாணி பேரூராட்சி, செம்புளிச்சாம் பாளையத்தில் ஸ்ரீஅம்மன் பைபர்ஸ் என்கின்ற தேங்காய் மட்டை நாரை பிரித்தெடுக்கும் நிறுவனம் இயங்கிவருகிறது. மேற்கண்ட நிறுவனம் தேங்காய் மட்டை நாரின் கழிவுகளை பெருமளவில் கொட்டி வைத்துள்ளனர். இதனால் அங்கு மாசு ஏற்பட்டு, மக்கள் சுவாசக் கோளாறினால் பாதிக்கப்படுகின்றனர். மேற்கண்ட கழிவுகளை நீரில் அலசி அக்கழிவு நீரை ஓடைகளில் விடுவதால் அருகில் உள்ள நீர் ஆதாரங்கள் மாசடைந்து வருகிறது. மேற்கண்ட தேங்காய் மட்டை கழிவுகளை அகற்றக்கோரி பேரூராட்சியில் புகார் மனுக்கள் அனுப்பப்பட்டன. பேரூராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், மாசு கட்டுப்பாட்டு வாரியத்திலும் புகார் மனு அனுப்பப்பட்டது. மாசு கட்டுப்பாட்டு வாரியம் பேரூராட்சிக்கு அனுப்பியுள்ள தனது 24.05.2023 நாளிட்ட கடிதத்தில் தேங்காய் நார் கழிவுகளை அகற்றுவதற்கும், அவற்றின் மீது தேவையான மேல் நடவடிக்கை எடுக்கவும் பேரூராட்சிக்கு தக்க அதிகாரம் உள்ளது என தெரிவித்து, நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது. ஆனால் அத்தாணி பேரூராட்சி நிர்வாகம் இதுவரை மேற்கண்ட கழிவுகளை அகற்றிடவோ அல்லது அங்கு வெளியேற்றப்படும் கழிவு நீரை முறையாக வெளியேற்றவோ தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. மேற்கண்ட கழிவுகள் இன்றுவரை அங்கேயே தேக்கி வைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட கழிவுகளை நீக்கிட பேரூராட்சி மன்றத் தீர்மானமும் இயற்றப்பட்டுள்ளது. மேலும் இந்நேர்வில் மாவட்ட ஆட்சியரும் அத்தாணி பேரூராட்சி நிர்வாகத்தை தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே மேற்கண்ட ஸ்ரீஅம்மன் பைபர்ஸ் என்கின்ற தேங்காய் மட்டை நாரை பிரித்தெடுக்கும் நிறுவனம் மேற்கண்ட இடத்தில் தேக்கிவைத்துள்ள தேங்காய் மட்டை நாரின் கழிவுகளை அகற்றவும், கழிவுகளை அலசும்போது வெளியேற்றப்படும் கழிவு நீரால்

அங்கு நீராதாரங்கள் பாதிக்காமலிருக்கவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்

மேலும் இந்நேர்வு தொடர்பாக மேற்கண்ட நிறுவனம் தொடர்ந்த வழக்கின் ( W.P. No. 16452 of 2023 and WMP No. 15832 of 2023) மீதான 16.6.2023 நாளிட்ட தீர்ப்பிலும் மனுதாரரான ஸ்ரீஅம்மன் நிறுவனத்தை அவர்கள் தேக்கி வைத்துள்ள தேங்காய் மட்டை நாரின் கழிவுகளை இரண்டு மாத காலத்தில் அப்புறப்படுத்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் எனது 22.7.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி தெரிவித்து இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

(6) எதிர்மனுதாரரான அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. மு. நாகேஷ் என்பவர் 19.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"ஈரோடு மாவட்டம், அந்தியூர் அத்தாணி பேரூராட்சி, செம்புளிச்சாம் பாளையத்தில் ஸ்ரீஅம்மன் பைபர்ஸ் என்கின்ற தேங்காய் மட்டையை பிரித்தெடுத்தெடுத்து நார் தயாரிக்கும் நிறுவனம் இயங்கி வருகிறது. மேற்கண்ட நிறுவனம் எவ்வித அனுமதியும் இல்லாமல் இயங்கி வருகிறது. இது குறித்து மனுதாரர் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு புகார் மனு அனுப்பியதில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் தனது 24.5.2023 நாளிட்ட கடிதத்தில் அத்தாணி பேரூராட்சி ச.எண் 199/2, 199/3ல் மற்றும் சாலையோரங்களில் கொட்டப்படும் தென்னை நார் கழிவுகளை பேரூராட்சியால் அகற்றிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ள நிலையில், பேரூராட்சியால் இதுநாள் வரை எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் மேலும், தேங்காய்மட்டை நார் கழிவுகள் மற்றும் அத்தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் ஆகியவை விரைவில் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

<u>பிரிவு " 7 " The Ombudsman shall perform all or any of the following functions, namely –</u>

7 (c) <u>where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்.</u>

மனுதாரர் தனது 22.09.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் அத்தாணி பேரூராட்சிக்குட்பட்ட செம்புளிச்சாம்பாளையம் என்கிற இடத்தில் இயங்கி வரும் ஸ்ரீ அம்மன் பைபர்ஸ் என்கிற தேங்காய்மட்டைநாரை பிரித்தெடுக்கும் நிறுவனமானது, பிரித்த தேங்காய் மட்டை நார்களின் கழிவுகளை புல எண்கள் 84.85 மற்றும் 199/2, 199/3 ஆகிய இடங்களில் கொட்டி நீரில் சுத்தப்படுத்தி, அந்த அசுத்த நீரை ஓடைகளில்

விடப்படுவதால், நிலத்தடிநீர் மற்றும் சுற்றுச்சூழல் மாசு அடைவதாக புகார் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், செம்புளிச்சாம்பாளையம் என்ற இடத்தில் இயங்கி வரும் ஸ்ரீஅம்மன் பைபர்ஸ் என்கிற நிறுவனத்தார் தேங்காய் மட்டை நாரை பிரித்தெடுத்து அதன் கழிவு நீரை ஓடைகளில் கலந்து விடுவதாலும், தேங்காய்மட்டை நார்களின் கழிவுகளை அகற்றப்படாமல் கொட்டி வைப்பதால், நிலத்தடிநீர் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுவதாக மனுதாரர் திரு. S.T. லோகநாதன், என்பவர் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநருக்கு 18.11.2022 நாளிட்ட மனு அளித்ததில் பேரூராட்சிகள் உதவி இயக்குநர் தனது 25.11.2022 குறிப்பாணையில் மனுதாரரின் புகாரினை குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

மேலும் மனுதாரர், ஈரோடு மாவட்ட மாசுகட்டுப்பாடு வாரியத்திற்கும் புகார் மனு சமர்ப்பித்ததில், ஈரோடு மாவட்ட மாசுகட்டுப்பாடு வாரிய சுற்றுச்சூழல் பொறியாளர் தனது 24.05.2023 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய குறிப்பாணை நாள் 18.09.2014ன்படி 1920 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிறுவன சட்டம் மற்றும் 1939ஆம் பொது சுகாதார சட்டத்தின்படி மேல்நடவடிக்கை எடுக்கும்படி, அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ஆனால் அத்தாணி பேரூராட்சி நிர்வாகம் சார்பில் ஒரு எச்சரிக்கை அறிவிப்புப் பலகையில் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து ஏற்படுத்தும் தென்னை நார் கழிவுகளை பேரூராட்சி கிராமபகுதி மற்றும் விவசாய நிலங்களில் தொட்டி வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்கிற பலகை மட்டும் வைத்து, மேற்படி கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கு பேரூராட்சி செயல் அலுவலரால் எவ்வித ஆரம்பக் கட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதன் மூலம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது பணியில் அலட்சியத்துடன் நடந்துகொண்டு, மெத்தனமாகவும் உள்நோக்கத்துடன் நடந்து கொண்டுள்ளார் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. பொது மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் மற்றும் ஈரோடு மாவட்ட மாசுக்கட்டுப்பாடு வாரியம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தியும் பொறுப்பற்ற முறையில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் தனது பணியில் கடமை தவறி செயல்பட்டுள்ள அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்பாட்டினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் அத்தாணி பேரூராட்சிக்குட்பட்ட ஓடையில் மற்றும் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடத்தில் தேங்காய்மட்டை நார்கழிவுகள் தேங்காவண்ணம், அவற்றினை அகற்றிடவும் மற்றும் ஓடையில் குடிநீர் மாசு ஏற்படாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சி செயல் அலுவலரையும் அதனை கண்காணித்து உறுதி செய்திடுமாறு ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதில் கவனக் குறைவாகவும் அலட்சியப் போக்குடனும் நடந்து கொண்ட செயல் அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இது போன்ற செயல் அலுவலரின் பொறுப்பற்றச் செயல்பாடுகள் கண்டனம் செய்யப்படுகிறது.

மேலும் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அறிக்கை 30 தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு, நவம்பர் 16– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.T. லோகநாதன்,
எண்.129, வடக்குதோட்டம்,
செம்புளிச்சாம்பாளையம் அஞ்சல்,
அந்தியூர் வட்டம், அத்தாணி–வழி,
ஈரோடு மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
அத்தாணி பேரூராட்சி ,
ஈரோடு மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

5) ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்,
ஈரோடு மாவட்டம்.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்